பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

Time Reader. ial Staff Date-Time

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்10 வள்ளுவர்ஆண்டு 2026 புரட்டாதி 27 சனிக்கிழமை (14-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 324

# யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதற்கு கடுமையாகச் சண்டையிட நேரிடும்

## இராணுவத் தளபதி ஜெரி கணிப்பு

கொழும்பு, ஒக்டோபர் 14

படையினரின் பாரிய தாக்குதல் ஆரம்பமாகும் போது யாழ்ப்பாணத்தை என்ன விலை கொடுத்தும் காப்பாற்றுவதற்கு விடுதலைப் புலிகள் முயற்சிப்பார்கள். பெரும் சண்டை ஒன்றை நடத்தாமல் அவர்கள் அதனை விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்பதனையும் நாமறிவோம். ஆகவே படையினர் கடும் சண்டையிட நேரிடும்.

இவ்வாறு தெரிவித்தார் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா.

இராணுவத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டங்களின் பின்னர்

(7ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் பாரிய தாக்குதல் திட்டம் குறித்து ரணில் கவலை

### யாழ். மக்களுக்கு உணவு அனுப்பவும் கோரிக்கை

கொழும்பு, ஒக். 14

வடபகுதியில் இராணுவம் பாரிய தாக்குதல் நடத்த இருப்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா கவலை தெரிவித்துள்ளார். யாழ். மக்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்புமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ரொய்ட்டர் செய்தியாளருக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் ரணில் விக்கிரமசிங்கா மேலும் தெரிவிக்கையில்.

இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதற்கு அரசே காரணம்.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் புலிகளுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள போரினால் இலங்கையின் பொருளாதாரம் சரிந்து விடவில்லை மாறாக பொருளாதார அடிப்படைகளை ஸ்திரப்படுத்த அரசு தவறியதே பொருளாதார சரிவுக்கு காரணமாகும் என்றார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நடந்த தாக்குதல் அரசின் இயலாமையை காட்டுகிறது!

### ஐ.தே.க. எம்.பி. தயாரத்னா அறிக்கை

கொழும்பு, ஒக். 14

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் வீட்டின் மீது கடந்த திங்கள் இரவு நடத்தப்பட்ட தாக்குதல் கொழும்பின் பாதுகாப்பு நிலைவரத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதில் அரசாங்கத்துக்கு இருக்கும் இயலாமையையே காட்டுகிறது.

இவ்வாறு அரசைச் சாடும் அறிக்கை ஒன்றை எதிர்க்கட்சியான ஐ.தே.க. வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான ஐ.தே.க. உபகுழுவின் தலைவரான பி. தயாரத்னா வெளியிட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்

[7 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். மாவட்டத்தில் 13 மாணவர்கள் 8"டி" பெற்றுச் சிறப்பான சித்தி

### வேம்படி, சுண்டிக்குளி மகளிர் முன்னணியில்

யாழ்ப்பாணம், ஒக். 14

அண்மையில் நடைபெற்ற தமிழீழ பொதுக் கல்வித் தேர்வின் யாழ். மாவட்ட பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் இம்முறை 13 மாணவர்கள் எட்டுப் பாடங்களில் சிறப்புச் சித்தி (டி சித்தி) பெற்றுள்ளனர்.

இம் முறை இத் தேர்வில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியும், சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று முன்னணியில் உள்ளன.

வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த நான்கு மாணவிகளும்—

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த நான்கு மாணவிகளும் எட்டுப்பாடங்களிலும் சிறப்புச் சித்தி (டி சித்தி) பெற்றுள்ளனர்.

அத்துடன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இரு மாணவர்களும்—

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் இரு மாணவர்களும்—

யாழ். இந்துக் கல்லூரியில் ஒரு மாணவனும்—

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஒரு மாணவனும் எட்டுப் பாடங்களிலும் சிறப்புச் சித்தி பெற்றுள்ளனர்.

பாடசாலை ரீதியாக சிறந்த பெறுபேறு விவரம் வருமாறு:-

வேம்படி மகளிர்

★ எட்டு டி. - நால்வர்—

கிருஷ்ணகோபி பரராஜசேகரம், கல்யாணி பாலசுப் [illegible]

(7 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகர் கரையோர பகுதிகளை நோக்கி ஷெல்

### ஐந்து மாடிப்பகுதியில் பெண் காயம்

அளவெட்டி, ஒக். 14

மண்டைதீவு ராணுவ முகாமிலிருந்து நேற்று நண்பகலும் பிற்பகலும் யாழ் நகர கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஷெல்கள் பண்ணை, குருநகர், கோட்டை, கொட்டடி, பாசையூர் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

நேற்று பிற்பகல் குருநகர் ஐந்துமாடிக்கு அருகில்வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் அந்தோனிப்பிள்ளை ராணி (வயது 44) என்பவர் காயம் அடைந்தார். அவர் தற்போது யாழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(இ-3-51-13)

## தெற்கில் ஜே. வி. பி கையெழுத்து வேட்டை

### தீர்வு யோசனைக்கு எதிராக

கொழும்பு, ஒக். 14

அரசாங்கத்தின் தீர்வு யோசனைக்கு எதிராகச் சிங்கள மக்களிடம் கையொப்பம் வாங்கும் இயக்கத்தை ஜனதா விமுக்தி பெரமுன [ஜே.வி.பி] தெற்கு மாகாணத்தில் ஆரம்பித்துள்ளது.

தீர்வு யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் பத்து லட்சம் கையொப்பங்களைப் பெறும் திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை தென் மாகாணத்தில் வைத்து ஆரம்பிக்கப்பட்டது.

அம்பாந்தோட்டை எம். பி நிரால் கலப்பதியும், ஆரிய புலேகொடவும் தென்மாகாணத்துக்குச் சுற்றுப் பயணம் செய்து கையொப்பம் பெறும் இயக்கத்தைத் தொடக்கினர்.

தென் மாகாணத்தில் தமது இயக்கத்துக்கு பெரும் ஆதரவு இருந்ததாக ஜே.வி.பி அங்கம் வகிக்கும் தேசிய மீட்பு முன்னணியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் பிரசுரங்கள் வீசப்பட்டன

யாழ்ப்பாணம், ஒக் 14

குடாநாட்டில் நேற்றும் விமானத்திலிருந்து துண்டுப் பிரசுரங்கள் கத்தை கத்தையாக வீசப்பட்டன.

(இ-13-31)

## தனியார் விமானங்கள் இன்று முதல் சேவை

### அரசு அனுமதி வழங்கியது

தனியார் நிறுவனங்கள் இன்று முதல் உள்நாட்டு விமான சேவைகளை ஆரம்பிக்க அனுமதிக்கப்படும்.

இலங்கை விமானப் படையின் மேற்பார்வையில் உள்நாட்டுச் சேவைகளை நடத்த இந்த நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக விமானப் படை அதிகாரி தெரிவித்தார்.

அதேசமயம்— விமானத்தில் பயணம் செய்யும் விமானிகளின் பெயர் விவரங்களை விமானம் பறக்க முன்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நிறுவனங்கள் அறிவிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## கல்யாணியில் பொருள்கள் ஏற்றுவது மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 14

கொழும்பு துறைமுகத்தில் தரித்துள்ள "லங்கா கல்யாணி" கப்பலில் உணவுப் பொருள்களை ஏற்றும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தகவல் ஒன்று தெரிவித்தது.

குடாநாட்டில் உள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்கள் கடந்த வாரம் இக்கப்பலில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளநிலை, முதனிலை தேர்வுகள்

# இடம்பெயர்ந்த மாணவர் விண்ணப்பிக்க வசதி

யாழ்ப்பாணம், ஒக். 14

இடம்பெயர்ந்து வாழ்வதின் காரணமாக இளநிலை மற்றும் முதனிலை தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க முடியாதுள்ள மாணவர்கள் —

தாம் இப்போது தங்கியுள்ள பகுதியில் கிட்டிய பாடசாலை மூலமாக விண்ணப்பம் அனுப்ப வசதி செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும் என்று தேர்வு ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மாணவர்களின் விண்ணப்பங்களையும் பணத்தையும் ஏற்கும் பாடசாலைகளின் அதிபர்கள் அவற்றை சம்பந்தப்பட்ட மாணவர் கடைசியாகப் படித்த பாடசாலையின்பெயரைக் குறிப்பிட்டு, [கோட்ட ரீதியாக] தமக்கு அனுப்ப வேண்டும் என்றும் தேர்வு ஆணையர் கேட்டுள்ளார். [அ]

# நல்லூர் உ. அ. அ. பிரிவு பாதுகாப்பு நிதி சேகரிப்பு

நீராவியடி: ஜே/101:, கலட்டிஜே/100 கிராம சேவகர்பிரிவுகளில் வாழுகின்ற —

தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒப்புதலளித்து இன்று வரை நிதியினை வழங்காத—மக்கள் அனைவரும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில் அமைந்துள்ள தொடர்பகத்தில் நிதியினை வழங்குமாறு பாதுகாப்பு நிதி தொடர்பகத்தினர் அறிவித்துள்ளனர்.

அரியாலை ஜே/91, ஜே/92, ஜே/93 கிராம சேவகர் பிரிவுகளில் வாழுகின்ற —

தேசிய பாதுப்பு நிதிக்கு ஒப்புதலளித்து இன்று வரை நிதியினை வழங்காத — மக்கள் அனைவரும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 00 மணிதொடக்கம் 5 30 மணிவரை யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் (ஸ்ரான்லி கல்லூரி) அமைந்துள்ள தொடர்பகத்தில் நிதியினை வழங்குமாறு பாதுகாப்பு நிதி தொடர்பகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். [இ]

# ஆங்கில கற்கை நெறி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 14

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் உயர் தொழில் ஆங்கில கற்கை நெறி இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பமாக விருப்பதாக பிராந்திய இயக்குநர் திரு.ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார். [ஐ-3]

# நோபல் சமாதான பரிசு

ஸ்ரொக்ஹோம், ஒக். 14

இவ்வாண்டுக்கான நோபல் சமாதானப் பரிசுபிரிட்டனைச் சேர்ந்த ஜோசவ் றோஸ் பினாட்டுக்கு (வயது 86) நேற்று வழங்கப்பட்டது.

உலகில் அணு ஆயுதங்களை குறைப்பதற்காக இவர் நடத்தி வந்த போராட்டங்களைக் கௌரவித்தே நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டிருப்பதாக நோபல் பரிசுக் குழு அறிவித்துள்ளது.

போலந்தைப் பிறப்பிடமாக கொண்ட ஜோசவ் றோஸ் பினாட் ஒரு விஞ்ஞானி ஆவார். ஆயுதப் பரிகரணத்துக்கும், உலக சமாதானத்துக்கும் பல தசாப்தங்களாக இவர் போராடி வந்தார். [ஐ]

# யாழ். மாவட்டத்தில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பிரமணியம்,சிவகௌரி கோசசிங்கம்) 7 டி, ஒரு சி-12 பேர்.

சுண்டிக்குளி

★ எட்டு டி நால்வர்— அம்பிகா கதிர்காமநாதன், சுமுதினி சம்பந்தபிள்ளை, எமி ஷியாமா நாகராஜா, பிரசாந்தினி நாகராஜேஸ்வரன்) 7 டி, ஒரு சி - 2 பேர்.

ஹாட்லி

★ எட்டு டி இருவர்— தங்கராஜா பிரதீபன், பாலகிட்ணபிள்ளை இளந்திரையன்), 7 டி, ஒரு சி - மூவர்.

சென் ஜோண்ஸ்

★ எட்டு டி இருவர்— [சிவனேசராஜா நளிந்த, குகதாஸ் சுதர்சன்), 7 டி, ஒரு சி - 7 பேர்.

யாழ். இந்து

★ எட்டு டி ஒருவர் — (கிருஷ்ணபிள்ளை குருபரன்) 7 டி,ஒரு சி-8 பேர்.

கனகரத்தினம் ம. வி

★ எட்டு டி ஒருவர் — [மெற்றாஸ் மெயில் ஜெய.)

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை உத்தியோகபூர்வமாக வெளியிட்ட மற்றும் சிறந்த பெறுபேறுகள் வருமாறு:-

★ சாவகச்சேரி இந்து — 7 டி ஒரு சி இருவர்.

★ மெதடிஸ்த பெண்கள் — 7 டி ஒரு சி மூவர்

★ உடுப்பிட்டி மகளிர் — 7 டி ஒரு சி ஒருவர்.

★ யாழ். இந்து மகளிர் — 7 டி ஒரு சி ஒருவர்.

★ சென். பற்றிக்ஸ் — 7 டி ஒரு சி - ஒருவர்.

★ உடுவில் மகளிர் — 6 டி 2 சி - ஒருவர்

★ யாழ்ப்பாணக் கல்லூரி — 6 டி 2சி - ஒருவர், 6 டி ஒரு சி ஒரு எஸ் - ஒருவர்.

★ வட்டு இந்துக் கல்லூரி — 6 டி 2 சி - இருவர்.

★ வடமராட்சி மத்திய மகளிர் — 6 டி 2 சி - ஒருவர்.

★ மகாஜனக் கல்லூரி — 6 டி 2 சி - ஒருவர்.

★ வடமராட்சி இந்து மகளிர் — 6 டி 2சி - ஒருவர்.

★ விடத்தற்பளை கமலாசினி — 5டி 3சி - ஒருவர்

★ மல்லாகம் ம. வி — 5டி 3சி - ஒருவர்.

★ கரவெட்டி விக்கினேஸ்வரா — 5டி 3சி - ஒருவர்

★ வரணி ம. வி — 6 டி ஒரு எஸ் - ஒருவர்.

★ இடைக்காடு ம. வி — 6டி ஒரு எஸ் - ஒருவர்.

★ சாவகச்சேரி மகளிர் — 5டி 3சி - ஒருவர், 5டி 2சி ஒரு எஸ் - ஒருவர்.

★ பண்டத்தரிப்பு மகளிர் — 4டி 4சி - ஒருவர்.

இளவாலை கொன்வென்ட் — 4டி 4சி - ஒருவர்.

★ கரைநகர் சுந்தரமூர்த்தி — 4டி 3சி ஒரு எஸ் - ஒருவர்.

★ அராலி சரஸ்வதி வித்— 4டி 3சி ஒரு எஸ் - ஒருவர்.


தென்மராட்சி

தீவக வலய உதைபந்தாட்ட சங்கம்

நடத்தும்

## விசேட காட்சி
## உதைபந்தாட்ட போட்டி

இடம்: சாவகச்சேரி நகரசபை பொது மைதானம்
காலம்: 14 – 10 – 1995 சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 3-00 மணி

நாவற்குழி இலக்கியன் வி. க. எதிர்
மிருசுவில் புனித நீக்கிளர் வி. க., மயிலங்காடு
ஞானமுருகன் வி. க. எதிர் இளவாலை யங் கென்றிஸ்

15 – 10 – 1995 ஞாயிறு பிற்பகல் 3-00 மணி

சாவகச்சேரி சிறிதாஸ் வி. க. எதிர் தோப்புக்காடு
இளைஞர் வி. க., ஊரெழு றோயல் வி. க.
எதிர் நாவாந்துறை சென்மேரிஸ் வி. க.

அன்பளிப்பு ரூபா 10/-

தென்மராட்சி தீவக வலய
உதைபந்தாட்ட சங்கம்

(38991)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 31 — 05 — 1909

மறைவு: 04 — 11 — 1993

திருமதி

### தருமலட்சுமி திருநாவுக்கரசு

[ சொர்ணம் ]

திதி: 14 – 10 – 1995

அன்புடனும், பண்புடனும் எமை வளர்த்தெடுத்த அருமை அம்மாவே! முதிர்வோடும், தளர்வோடும் எம் உயர்வே கரு... மௌனக் காத்திட்ட தாயே! ஆண்டுகள் இரண்டு ... ந்ததம்மா அருமையிலும் அருமை அம்மாவே - ... கிறோம் நின் நினைவால் - உளம் நினைந்து பிரா... திக்கிறோம் இந்நாளில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்மார்.

மணியர்பதி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[38999]


# பொது மக்களுக்கோர் அறிவிப்பு

துரித சந்தைப்படுத்தல் சேவையால் விநியோகிக்கப்படும்

சாதாரண உப்பின் ஆகக்கூடிய புதிய சில்லறை விலை

## கிலோவுக்கு ரூபா 12-00 ஆகும்

கழுவிய உப்பின் ஆகக்கூடிய புதிய சில்லறை விலை

## கிலோவுக்கு ரூபா 18-00 ஆகும்

றோஸ் பிராண்ட் ரொபி விலைகளில் விலை மாற்றம் இல்லை

| ரொபிகளின் வகை: | ஒரு ரொபியின் ஆகக்கூடிய சில்லறை விலை: |
|---|---|
| 1. புறுட்டீஸ் | 02-00 |
| 2. சொக்கிலேற் மின்ற் | 02-00 |
| 3. மோல்டீஸ் | 01-50 |
| 4. செஸ்ரோ | 01-50 |
| 5. கொபி கிறஞ் | 01-50 |
| 6. கொபி ட்றொப்ஸ் | 01-50 |
| 7. ஏனையவை | 01-00 |

மொத்த விற்பனையாளர்கள் எமது முகவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

இவற்றைவிட அதிகவிலையில் விற்பனை செய்வோர்மீது நடவடிக்கை எடுக்கக்கூடியதாக அவர்களது விவரங்களை எமக்கு அறியத்தாருங்கள்.

துரித சந்தைப்படுத்தல் சேவை,
61, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

துரித சந்தைப்படுத்தல் சேவை,
கைத்தொழில் பகுதி,
த.பொ.மே. நிறுவனம், தாவடி.

தட்டை ஓடு, முகப்போடு, செங்கற்கள் இவைகளில் உங்கள் தேவை எதுவாக இருந்தாலும் பூர்த்திசெய்ய நாம் காத்திருக்கின்றோம்.

(சி/2469)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மராட்சியில் தங்கியுள்ள

# நீர்வேலி, சிறுப்பிட்டி பகுதி மக்களுக்கு உலர் உணவு

தென்மராட்சி, ஒக். 14
'இடிமுழக்க' இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதி நலனோம்பு நிலையங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் தங்கியுள்ள வலி. கிழக்கைச் சேர்ந்த 4ஆயிரத்து 125 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 310 பேருக்கு ஒரு வார உலர் உணவுப் பொருள்கள் கடந்த புதன்கிழமை காலைவரை வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக புனர்வாழ்வுப் பிரிவு புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

வலி. கிழக்கில் அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, ஆச்செழு, நவக்கிரி, ஆவரங்கால் கிழக்கு, ஆவரங்கால் மேற்கு, புத்தூர் வடக்கு, புத்தூர் கிழக்கு, புத்தூர் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கே ஒரு வார உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

இன்று சனிக்கிழமை முதல் நீர்வேலி, சிறுப்பிட்டிப் பகுதி மக்களுக்கு ஒரு வார உலர் உணவு வழங்கப்படவுள்ளது.
(ஓ-117)

# தென்மராட்சி முகாம்களில் பரவும் வயிற்றோட்டம்

தென்மராட்சிப் பகுதி நலனோம்பு நிலையங்களில் [முகாம்களில்] வயிற்றோட்ட நோய் வேகமாகப் பரவி வருகிறது. இந்நோயினால் பீடிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வயிற்றோட்ட நோயைக் கட்டுப்படுத்த சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

வயிற்றோட்ட நோய் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளையே வெகுவாக பாதித்துள்ளதால் உடனடி சுகாதார முறைகளை மேற்கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.
[ஓ-117]

# சாவகச்சேரிப் பகுதிக்கு மாறிவரும் அலுவலகங்கள்

வலி. கிழக்குப் பகுதி அரச உள்ளூராட்சி, கூட்டுறவுத் துறை ஆகியவற்றின் அலுவலகங்கள் சாவகச்சேரிப் பகுதிக்கு மாற்றப்பட்டு இயங்கி வருகின்றன.

அச்சுவேலி ப. நோ. கூ. சங்கம், கிராமிய வங்கி ஆகியவை சாவகச்சேரி பிரதேச சபை சரசாலை உப அலுவலகத்திலும், அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கட்டடத்திலும், கோப்பாய் பிரதேச செயலகம் சாவகச்சேரி நகரசபைக்கு அருகில் உள்ள கட்டடத்திலும் இயங்குகின்றன.

மேலும் பல அலுவலகங்களை தென்மராட்சிப் பகுதிக்கு மாற்றுவதற்கு கட்டட வசதிகள் தேடப்பட்டு வருகின்றன.
[ஓ-117]

## அதிரடி அரங்கு

'எயர் பஸ்' கொள்வனவில் இடம்பெற்ற ஊழலால் எயர் லங்கா நிறுவனத்தின் மானம் கப்பலேறுவது ஒரு புறமிருக்க —

''எயர் லங்கா''வை நாடும் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக வீழ்ச்சியடையத் தொடங்கியிருப்பதை அடுத்து அந்நிறுவனம் கட்டையேறும் நிலை தற்போது உருவாகி வருகின்றதாம்.

கொழும்பில் வெடிகுண்டுத் தாக்குதல் அச்சுறுத்தல்களை விடுத்த எல்லாளன் படையின் மிரட்டல் மருந்துக்கு பலன் இப்போது ஆறுதலாகத்தான் தெரியத் தொடங்கியிருக்கின்றதாம்!

எல்லாளன் படையின் மிரட்டலாலும், நாட்டில் இடம்பெற்று வரும் யுத்தத்தாலும், இரத்மலானையிலிருந்து புறப்பட்ட 'அவ்ரோவ்' விமானம் ஜா-எலக் கடலில் வீழ்ந்து மூழ்கியமை தொடர்பாக கிளப்பப்பட்டுள்ள ஊகங்களாலும் —

எயர் லங்காவை நாடும் பயணிகளின் எண்ணிக்கையில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது.

எயர் லங்காவின் விமானங்களில் குண்டுகள் வெடிக்கலாம் என்ற அச்சம் காரணமாகவே உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகள் எயர் லங்காவைத் தவிர்த்து பிறநாட்டு விமான சேவைகளை பெரிதும் நாடுகின்றார்கள் என சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

நல்ல உபசரிப்பு, சொகுசுப் பயணம் குறைந்த கட்டணம் போன்ற கவர்ச்சிகளால் கடந்த காலங்களில் பெரும் எண்ணிக்கையானோர் எயர்லங்காவை நாடி வந்தனர்.

ஆனால் இவற்றுக்காக வம்பை ஏன் விலை கொடுத்து வாங்குவான் என்று எண்ணி பலரும் இப்போது எயர் லங்காவை ஒதுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

அதனால் வேறு விமானச் சேவை நிறுவனங்களையே வெளிநாடு செல்லும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகள் நாடுகின்றனர்.

முன்னரெல்லாம் எயர் லங்காவில் ''ரிக்கெற்'' பதிவு செய்வதற்கு இரண்டு, மூன்று நாள்கள் சென்று ''கியூ''வில் நின்று அலைய வேண்டும் இப்போது அலுவலகத்துக்குச் சென்ற ஒரு மணித்தியாலத்திலேயே எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு வந்து விடலாம் என்று கடந்த வாரம் கொழும்பு சென்று தமது உறவினர் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்பிய ஒருவர் தெரிவித்தார்.

அதாவது ''எயர் லங்கா''வுக்கு இருந்த மவுசும், மதிப்பும் போய் அது இலையான் விரட்டுகிறது என்ற நிலை தான் இப்போது!

அரசனும் ஒரு நாள் ஆண்டியாவதில்லையா ....

— மின்னல்

# வெளிமாவட்டம் செல்ல விரும்பும் அகதிகளுக்கு போக்குவரத்து வசதி

தென்மராட்சி, ஒக். 14
இடிமுழக்க இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி பகுதியில் தங்கியுள்ள வலிகாமம் கிழக்கு பகுதி மக்கள் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய வெளிமாவட்டங்களுக்குச் செல்ல விரும்பினால் தாம் தங்கியுள்ள பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறும்—

அவ்வாறு செல்ல விரும்புபவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படுமெனவும் — யாழ் செயலக திட்டமிடல் பகுதியினர் சகல பிரதேச செயலகங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளனர்.
(இ-117)

## மட்டக்களப்பு அம்பாறையில் சுவரொட்டிகள்

அரசின் தீர்வுயோசனைகளை ஆதரித்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தீர்வு யோசனைகளில் செய்ய வேண்டிய திருத்தங்கள் குறித்தும் அச்சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ஓ-3)

தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்தோர்

# தற்காலிகமாக வீடுகளை அமைக்க மரம், கிடுகுகள்

''இடிமுழக்க'' நடவடிக்கையால் இடம்பெயர்ந்து தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளின் நலனோம்பு நிலையங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் தங்கியுள்ள மக்கள் தங்களது நண்பர்கள், உறவினர்களின் காணிகளில் தற்காலிகமாக வீடுகளை அமைப்பதற்கான மரங்கள், கிடுகுகள், சலாகைகளை பிரதேச செயலகம் வழங்கவுள்ளது.

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதியில் தற்காலிகமாக வீடு அமைத்து வசிக்க விரும்பும் மக்கள் தாம் தங்கியுள்ள பிரிவு கிராம அலுவரிடம் உரிய படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாமெனவும் —

வரணி, இயற்றாலையில் அமைக்கப்பட்டுவரும் ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் வீடு பெற விரும்புவோரும் விண்ணப்பிக்கலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
[ஓ-117]

# பத்திரிகைக்காரர்கள் துள்ளினால் ஜனாதிபதி அடக்கவேண்டி நேரிடும்

## மிரட்டுகிறார் அமைச்சர் திஸாநாயக்க

செய்தித் தணிக்கைக்கு எதிராக சிலர் நீதிமன்றம் செல்லத் தயாராகின்றனர். பத்திரிகைக்காரர்கள் அதிகம் துள்ளினால் ஜனாதிபதிக்கு அவர்களை அடக்க வேண்டி நேரிடும். முன்னைய காலங்களில் நீதிபதிகளுக்கு நேர்ந்த கதி எங்களுக்கு ஞாபகம்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர்., பிரேமதாசா போன்றவர்களைப் போலவே எமது ஜனாதிபதிக்கும் நிறைவேற்று அதிகாரங்கள் உள்ளன. அரசின் செயற்திட்டங்களுக்கு இடையூறுகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படின் முன்னைய ஜனாதிபதிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை நாங்களும் மேற்கொள்ள நேரிடும்.

— இவ்வாறு அமைச்சர் எஸ் பி. திஸாநாயக்க ஹேவாஹெட்ட என்ற இடத்தில் நடைபெற்ற விழா ஒன்றில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் —

இப்போது ஒரு ஆசிரியரை மாற்றுவதற்குக் கூட அரசுக்கு சக்தி இல்லை. உடன் நீதிமன்றம் செல்கிறார்கள்.

கூக்குரலிடும் பிக்குமார்கள்

விடுதலைப் புலிகளை மட்டுப்படுத்தி யுத்தத்தை நிறுத்தலாம் என்றால் அதற்கு எதிராக பௌத்த பிக்குகள் கூக்குரலிடுகிறார்கள். அவர்களுக்குப் பத்திரிகைகள் ஒத்தாசைகளை வழங்குகின்றன. இந்த விதத்தில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முயன்றால் ஒருபோதும் இந்த நாட்டை உருவாக்க முடியாது — என்றார்
[ஓ-10]

அதிகார பரவலாக்கல் குறித்து ஆராய

# ஐ. தே. க. நிர்வாகக் குழு காலி நகரில் கூடுகிறது

கொழும்பு, ஒக். 14
அதிகாரப் பரவலாக்கம் உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தம் என்பன தொடர்பாக தனது நிலைப்பாட்டை ஆராயும் முகமாக ஐ. தே. க. இன்று கூடவுள்ளது.

இன்றும் நாளையும் ஐ. தே. கவின் அகில இலங்கை நிர்வாகக்குழுக் கூட்டம் காலியில் நடைபெறவுள்ளது.

அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாகவும், அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பாகவும் ஆராய தனித்தனியாக இரு குழுக்களை ஐ. தே. க. நியமித்துள்ளது.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக ஆராயும் குழுவுக்கு அனுரா பண்டாரநாயக்காவும் —

உத்தேச அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான குழுவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கீறோன் பெர்னாண்டோவும் தலைமை வகிப்பர்.
(ஓ-ஐ)

## கொழும்பு உருளைக்கிழங்கு

கரணவாய், ஒக். 14
நீண்டநாள் இடைவெளிக்குப் பின்னர் உருளைக்கிழங்கு பெருமளவில் கொழும்பில் இருந்து கிளாலியூடாக யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனால் உருளைக்கிழங்கின் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
[ஓ-ரி]

### புலிகளின் குரல் வானொலியில்

14 - 10 - 1995
சனி இரவு
★ 8-02 — புரட்சிக்குரல்
★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-20 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சுவியரங்கம் — ''தீ சுமந்த தியாக வேள்வியிலே''

15 - 10 - 1995
ஞாயிறு காலை
★ 7-02 — மாவீரர் வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து களத்தில் மலர்ந்தவை

### தமிழீழ வானொலியில்

சனி மாலை
★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் விளாடி வினா
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-05 — [illegible]
★ 6-10 — செய்திகள் தொடர்ந்து பாமாலை

இராணுவ கப்டனின் வீட்டில் புகுந்து

# ரூபா 3 லட்சம் பாதுகாப்பு நிதி கேட்ட சிப்பாய்கள்!

கொழும்பு, ஒக். 14
இராணுவக் கப்டன் ஒருவரின் வீட்டுக்குள் உடைத்துச் சென்று 3 லட்சம் ரூபா ''பாதுகாப்பு நிதி'' கோரிய இரண்டு சிப்பாய்களில் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

ரி-56 துப்பாக்கியுடனும் கைக்குண்டுகளுடனும் சென்றிருந்த இவர்கள் கப்டனின் பெற்றோரிடம் இப்பணத்தைத் தரும்படி கேட்டனராம். பணத்தைத் தர மறுத்தால் கொலை செய்து விடுவோம் என்றும் அவர்கள் அச்சுறுத்தினார்களாம்.

அவ்வேளை கப்டனின் தாயார் கூச்சலிட்டபோது அவர்கள் தப்பி ஓடி விட்டார்கள்.

இவர்களில் ஒருவர் பக்கத்தில் இருந்த பற்றை ஒன்றில் மறைந்திருந்தபோது கைது செய்யப்பட்டார்.

கப்டன் யாழ்ப்பாணத்தில் கடமையில் இருப்பதை அறிந்தே இந்த இராணுவத்தினர் அங்கு வந்திருக்க வேண்டும் என்று பொலீஸார் நம்புகின்றனர்.
(ஓ-க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அடைவைக்கக்கூடிய நல்லினக் கோழிமுட்டைகள், பெரிய சாப்பாட்டு முட்டைகள் மற்றும் இதரை வாழைக் குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38987)

நேரம் மூன்று போத்தல் பால் கறக்கும் சணல் ஆட்டின் மறிக்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: குணசிங்கம் மாஸ்ரர், 22, ராதா லேன், வண்ணார் பண்ணை. (38992)

### சோதிடம்

ஜாதகம் கணிக்க கல்வி, திருமணம், பிரயாணம், எதிர்கால பலன் அறிய ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல. 361, பருத்தித்துறை வீதி, நல்லூர். (38973)

### வீடு விற்பனைக்கு

2 பரப்பு காணியில் அமைந்திருக்கும் வீடு விற்பனைக்கு உண்டு. பிரபல ஆண், பெண் பாடசாலைகள், யாழ். செயலகம், தனியார் மருத்துவ மனைக்கு அருகில் உள்ளது. விலாசம்: 30, சுவாட்ஸ் லேன், சுண்டிக்குளி (கண்டி வீதியில் உள்ள முன்னைய ஆசீர்வாதம் அச்சகம் முன்பாக) (8661)

### வணிக புள்ளி விபரவியல்

வெளிவந்து விற்பனையாகின்றன A/L புதிய பாடத்திட்டத்திற்குரியது. ரூபா 250/-. யாழ்ப்பாண புத்தக நிலையம், 141, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். [சி-1739]

### புலமைப் பரிசில் பரீட்சை

புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 15-10-95 ஞாயிறு முற்பகல் 8 மணிக்கு நடைபெறும். அடுத்த 5ஆம், 4ஆம், 3ஆம் ஆண்டுகளுக்கான மாதிரிப் பரீட்சை 27 - 10 - 95 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் தேவையானோர் தொடர்புகொள்ளவும். இல 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (38979)

### மணப்பெண் தேவை

யாழ். இந்து, சாவகச்சேரியைச் சேர்ந்த, ஐரோப்பிய நாட்டில் எட்டு வருடங்களாக தொழில்புரியும் படித்த, ஒழுக்கமுள்ள, 28 வயது, மூலம் 2ஆம்பாதம், குற்றமற்ற மணமகனுக்கு மணப்பெண் தேவை. தொடர்பு: நா. சிறீரங்கநாதன், மிருக வைத்திய உத்தியோகத்தர், தபாற்கந்தோர் வீதி, பெருங்குளம்சந்தி, சாவகச்சேரி. (38946)

## பரிசளிப்பு விழா

இணுவில் இந்துசமயவளர்ச்சிச் சங்கமும் இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையும் இணைந்து நடத்திய சைவ சமய அறிவுப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றின் பரிசளிப்பு வைபவம் இன்று சனிக்கிழமை மாலை நான்கு மணிக்கு சைவப்பணிமனையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## அன்பளிப்பு

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து மட்டுவில் மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள 365 குடும்பங்களுக்கு சவர்க்காரக் கட்டிகளையும், மடிக்கை விசிப்புகளையும் அண்மையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் அன்பளிப்பாக வழங்கினர். (எ-117)

## 36ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கத்தின் 36ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16-10-95 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தலைவர் திரு. வி. இராசநாயகம் அவர்கள் தலைமையில் பாரதிதாசன் கல்வி நிறுவனத்தில் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தரும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செ. பேரின்பநாதன்,
செயலாளர்.

(சி-2458)

## நாம் தேடுபவர் நீங்களா......?

நீங்கள்:
★ உயிர்நுட்ப தொழில் நுட்பத்துறை பட்டதாரியா?
★ உயிரியல் இரசாயனப் பட்டதாரியா?
★ உணவு உற்பத்தித்துறைப் பட்டதாரியா?
★ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 5 வருடங்களுக்குக் குறையாத உற்பத்தி முகாமையாளர் அனுபவம் கொண்டவரா?

அப்படியானால் உங்களை எங்கள் நிறுவனத்தில்

### உணவு உற்பத்தி ஆலோசகர்

ஆக நியமிக்க விரும்புகின்றோம்

நீங்கள்:
★ சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்துறை பட்டதாரியா?
★ அல்லது இதற்குச் சமமான தகைமை ஒன்றை அங்கீகரிக்கப்பட்ட தொழிற்றுறை சார் கல்வி நிறுவனமொன்றில் பெற்றவரா?

அப்படியானால் உங்களை எங்கள்

### சந்தைப்படுத்தல் அலுவலர்

ஆக நியமிக்க விரும்புகின்றோம்

உதவு தொகைகளை நாம் சந்திக்கும் போது பேசித் தீர்மானிக்கலாம்

**31 — 10 — 1995 இற்கு முன்**
உங்கள் விவரங்களை எமக்கு அறிவியுங்கள்

**தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்,**
230, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

[சி-2451]

## 90 ஆம் நாள் நினைவலைகள்



| தாயின் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 24 — 10 — 1957 | 14 — 07 — 1995 |

### அமரர் ச. வசந்தகுமார்
[காந்தி]
(மினி வெதுப்பக உரிமையாளர்)

பாசத்தை பொழிந்து தன் உயிரினும் மேலாக எம்மை ஆளாக்கி வழி நடத்திய அப்பாவே! மூன்று மாதங்கள் ஆனதப்பா எங்கே போனாய்? உங்கள் ஆசை முகம் காணாது உங்கள் மறைவால் நாங்கள் மிகவும் மனம் தவிக்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவின் துயரால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், அப்பா, அம்மா,
சகோதரங்கள், மாமி, மைத்துனர்கள்,
மருமக்கள், உற்றார், உறவினர்கள்.

"மினி வெதுப்பகம்"
உரப்புலம்,
ஆனைக்கோட்டை. [38976]

## பிரி. அமைச்சர் வவுனியா விஜயம்

கொழும்பு வந்திருந்த பிரிட்டிஷ் வெளியுறவு மற்றும் பொதுநல விவகார அமைச்சின் இணை அமைச்சர் ஜெரிமி ஹன்லே கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்தார்.

வவுனியா சிதம்பரம் அகதி முகாமுக்குச் சென்ற அங்குள்ள அகதிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

தாண்டிக்குளம் சோதனை நிலையத்துக்கு சென்ற அவர் வடக்கில் இருந்து வந்தவர்களுடன் கலந்துரையாடியதுடன் சோதனை நடவடிக்கைகளையும் அவதானித்தார். [ஓ-3]

## உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் (வ/து)
### உடுப்பிட்டி
## வெற்றிடம்


எமது சங்கத்தால் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் வெதுப்பகத்தில் பணிபுரிய சுடுனர்களும், உதவி சுடுனர்களும் தேவை.

சம்பளம் மற்றும் வசதிகள் பேசித் தீர்க்கப்படும். விரும்புவோர் தமது விண்ணப்பங்களுடன் நேரில் 19-10-95ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு சங்க தலைமைக் காரியாலயத்திற்கு சமுகமளிக்கவும்.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
உடுப்பிட்டி.

[38989]

## 90ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



### செல்வன் வேலாயுதம் நகுலன்
(மாத்தளை)

தாயின் மடியில்: 02 — 03 — 1972
ஆண்டவன் அடியில்: 17 — 07 — 1995

மொட்டொன்று முகையவிழக் காத்திருந்தோம்
கணப்பொழுதில் கருகிடவா பார்த்திருந்தோம்
இளஞ்சிரிப்பும் உன் இன்முகமும்
கனவுகளும் கலைந்திடவா
ஆழக் கடல்தனில் அருமுத்தே! மைந்தா!
அழிய விட்டோம்
நெஞ்சினில் என்றும் நீறா நெருப்பைக் கொட்டிடவா
எங்கள் உதிரமே! போகுமிடம் கூறாது ஓடிவிட்டாய்
வழிகின்ற கண்ணீரில் உன் வடிவு கண்பதற்காக
அஞ்சலிகளை வேதனை விம்மல்களாய்
சமர்ப்பிக்கிறோம்
சாந்தியடைவாய்! சந்திப்பாய் எம்மை
மீள் பிறவி எடுத்து

உன் பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
(ஜெயச்சந்திரன், சேந்தன், மிதிலன்)
சைக்கிள் மாமா குடும்பத்தினர்.
அம்மம்மா, மாமாமார், மாமிமார்,
சித்தப்பாமார், சித்திமார்,
உறவினர்கள், நண்பர்கள்.

மா. அரியரத்தினம்.
(ஈழ ஊற்று)
399, அருச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.

[38948]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுதங்கள்:

# இந்தியா தனது பாதுகாப்புக்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்

## ராணுவ தளபதிகள் மத்தியில் பாதுகாப்பு அமைச்சர்

புதுடில்லி, ஒக். 14

பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளதால், இந்தியாவும் தனது பாதுகாப்புக்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என மீண்டும் இந்தியா அறிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை வழங்குவது என அமெரிக்க செனட் முடிவு செய்தது தேவையற்றது. இதனை இந்தியா விரும்பவும் இல்லை.

இவ்வாறு ஆயுதங்களை வழங்குவதை இந்தியா எதிர்க்கிறது அமெரிக்க செனட் சபையின் முடிவு, இந்தியாவின் எதிர்ப்பை அமெரிக்கா புறக்கணிப்பதாக அமைகிறது.

இந்தப் பிராந்தியத்தில் உள்ளநாடுகளுக்கு அமெரிக்கா ஆயுதங்களை விநியோகிப்பதை நாம் எதிர்க்கிறோம்.

இவ்வாறு இந்தியப் பிரதி பாதுகாப்பு அமைச்சர் மாலிக் அர்ஜுன், உயர் இராணுவத் தளபதிகளுக்கான மாநாடு ஒன்றில் அண்மையில் உரையாற்றியபோது தெரிவித்தார்.

இதே போன்ற கருத்தை இதற்கு முன்னர் இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஆர் எல். பாட்டியாவும் தெரிவித்திருந்தது தெரிந்ததே. [ஒ-எ]

### சந்நிதி ஆலயம் ஆச்சிரமம் ஷெல்வீச்சில் சேதம்

கரணவாய், ஒக். 14

கடந்த செவ்வாய் நள்ளிரவு வேளை படையினர் நடத்திய ஷெல்வீச்சில் தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயம், சந்நிதியான் ஆச்சிரமம் ஆகியனவும் சேதத்துக்குள்ளாகின.

ஷெல் வீச்சில் காயமடைந்த கதிரவேல் தர்மலிங்கம் (99 வயது) என்பவர் வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-5)

சமூக மதப்பிரச்சினைகளால்

# உலகில் இனங்களுக்கிடையே பாரபட்சம் அதிகரிக்கிறது

## ஐ. நா. அறிக்கை தெரிவிக்கிறது

ஜெனிவா ஒக். 14

பொருளாதார, மத சமூகப் பிரச்சினைகள் காரணமாக உலகெங்கும் இனங்களுக்கிடையிலான பாரபட்சம் அதிகரித்து வருவதாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடுகளில் ரோமர், ஜிப்சிகள் கறுப்பர் அராபியர், யூதர் மற்றும் குடியேற்ற வாசிகள், குடியேற்றத் தொழிலாளர்கள் இதர குழுவினர் மீது பாரபட்சம் காட்டப்படுகிறது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை நீக்குவதற்காக பல் வேறு முறைகளையும் ஐ நா. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது

இன, மொழி, துவேஷங்களைப் பரப்பும் வானொலி நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

### வீதி ஓரங்களில் பதுங்கு குழிகள்!

வலிகெற்கு, ஒக். 14

சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தினர் உடுவில், இணுவில். கிராமங்களில் பொது மக்கள் நன்மை கருதி வீதி ஓரங்களில் பதுங்குக் குழிகளை அமைத்து வருகின்றனர்.

உடுவில் — மானிப்பாய் பிரதான வீதியில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி இன்ரறக்ட் கழகத்தினருடன் இணைந்து பதுங்கு குழிகளை அமைப்பதில் றோட்டரக்ட் கழக உறுப்பினர்கள் ஈடுபட்டனர். (ஒ-152)

பஞ்சாயத் தேர்தலில்

# காங்கிரஸ் தலைமையில் 9 கட்சிகள் கூட்டணி

சென்னை, ஒக். 14

தமிழ்நாடு பஞ்சாயத் தேர்தலில் போட்டியிட காங்கிரஸ் (ஐ) கட்சித் தலைமையில் 9 கட்சிக் கூட்டணி ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தமிழ்நாடு காங்கிரஸ் (ஐ) கட்சித் தலைவர் குமரி அனந்தன் இதை அறிவித்தார்.

இந்தக் கூட்டணியில் எம் ஜி.ஆர். அண்ணா தி. மு. க., இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி, அம்பேத்கர் மக்கள் இயக்கம், இந்திய குடியரசுக் கட்சி, கிறிஸ்தவ ஜனநாயக முன்னணி, தமிழ்நாடு முஸ்லிம் லீக், வெகுஜன ஜனநாயகக் கட்சி, ஜனநாயக போர்வேர்ட் புளொக் ஆகியன இடம் பெற்றுள்ளன.

இந்தக் கூட்டணிக்கு முன்னாள் அமைச்சர் ராஜாராம் ஆதரவு தெரிவித்திருப்பதாகவும் —

பண்ருட்டி ராமச்சந்திரன் தலைமையிலான மக்கள் நல உரிமைக் கழகம் சேர்த்துக்கொள்ளப்படும் என்றும் குமரி அனந்தன் தெரிவித்தார்.

கூட்டணிக்குப் பிரதமர் நரசிம்மராவ் அனுமதியும் அங்கீகாரமும் அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

### சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 14

கல்வியங்காடு சாலையம்மன் கோயில் பகுதியில் கடந்த 8 ஆம் திகதி குப்பிவிளக்கு வெடித்துப் பரவிய தீயினால் உடல் முழுக்க எரிந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுவன் கடந்த வியாழக்கிழமை அங்கு மரணமானார்.

அளவெட்டி, மண்டுமண்டைப் பகுதியில்இருந்து இடம் பெயர்ந்த தேவதாஸன் திருலோகதாஸன் (வயது 12) என்ற சிறுவனே மரணமானவர் ஆவார்.

இச் சம்பவத்தின் போது இவரின் தாயாரும் எரிகாயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். (ஒ-15-152)

# ஆஸ்பத்திரி எக்ஸ்-றே பிரிவு இரவில் இயங்குவதில்லை!

## அவசர நோயாளர் கடும் பாதிப்பு

யாழ்ப்பாணம் ஒக். 14

யாழ். ஆஸ்பத்திரியில் எக்ஸ்-றே இயந்திரத்தைப் பயன்படுத்தும் நேரம் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் அவசர சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய நோயாளிகள் பெரும் வேதனைகளை அனுபவிக்க வேண்டி உள்ளது.

காயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைக்காக பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் ஒரு நோயாளி எக்ஸ்—றே எடுக்க மறுநாள் காலை 8-30 மணிவரை காத்திருக்க வேண்டும்.

எக்ஸ் -றே எடுக்கப்பட்ட பின்னரே உரிய சிகிச்சையை அளிக்க முடியும் என்பதால் அத்தகைய ஒரு நோயாளி நீண்ட நேரத்துக்கு வேதனையுடன் காத்திருக்க வேண்டி உள்ளது.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக இதுவரை காலமும் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திலேயே எக்ஸ் -றே பிரிவு இயங்கி வந்தது எனினும் இரவு நேரத்தில் குறிப்பிட்ட சில மணி நேரத்துக்கு அந்தப் பிரிவு செயற்பட்டு வந்தது. அதனால் உடனுக்குடன் அவசர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் கடந்த சில நாட்களாக இரவு நேரத்தில் எக்ஸ்-றே பிரிவு இயங்குவது இடை நிறுத்தப்பட்டுள்ளது. அதனாலேயே அவசர நோயாளர்கள் வேதனைகளை அனுபவிக்க வேண்டி உள்ளது. [ஐ]

மக்கள் இடம்பெயர்ந்த பகுதிகளில்

# இரவில் வாழைக்குலைகள் மாயமாகிவிடும் அதிசயம்!

## சந்தையில் திடீர் விலை சரிவு!!

யாழ்ப்பாணம், ஒக். 14

மக்கள் அதிகளவில் இடம் பெயர்ந்திருக்கும் உரும்பராய், நீர்வேலி, ஊரெழு ஈவினை, புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி பகுதிகளில் இரவோடு இரவாக வாழைக் குலைகள் மறைந்து விடுகின்றனவாம்.

விவசாயிகள் தமது தோட்டங்களுக்கு முதல் நாள் சென்று வாழைக் குலைகளை அவதானித்து விட்டு வண்டிலுடன் மறுநாள் சென்றால், அங்குவாழைக் குலைகள் மாயமாகி இருப்பதைக் கண்டு ஏமாற்றம் அடைகின்றனர்.

இன்னும் ஒரிரு மாதங்கள் பிந்திவெட்டக் கூடிய—உரிய பருத்துக்கு முற்றாத — குலைகளையும் கூட திருட்டுப் பேர்வழிகள் விடுவதாக இல்லை என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சந்தைக்கு திடீரென வாழைக் குலைகள் வரத் தொடங்கியுள்ளதை அடுத்து வாழைப்பழத்தின் விலை சரியத் தொடங்கியுள்ளது.

பழத்தின் தரத்திற்கேற்ப கிலோ 16 ரூபாவில் இருந்து 25 ரூபா வரை தற்போது விலை போகிறது. (ஒ-15)

# அனுராதபுர தாக்குதலில் ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக் 14

அனுராதபுரம் கோன்மரியாவேவவில் நான்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இரண்டு ஊர்காவல் படையினர் கொல்லப்பட்ட தாக்குதலில் நான்கு ஏ. கே. ரகத் துப்பாக்கிகளையும், மேலும் பல இராணுவ தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த செவ்வாய் அன்று நடந்த இந்த தாக்குதல் பற்றி ஏற்கனவே செய்தி வெளிவந்திருந்தது.

எதுவித இழப்புக்களும் இன்றி விடுதலைப்புலிகள் வெற்றிகரமாக நடத்திய இத்தாக்குதலில் ஏ கே. ரகத் துப்பாக்கிகள் — 4, அதற்குரிய ரவைக்கூடு — 15 கைக்குண்டுகள் — 4, நடுத்தர ரவைகள் — 208 ஆகியவற்றை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர். [இ-3]

# நாள் தவறாது தமிழர் அழிக்கப்படுகின்றனர்; ஆனால்காட்டிக்கொடுக்கும் இழிநிலைஇங்கு!

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஒக். 14

தீர்வுத் திட்டத்தை நாங்கள் அழித்து விடுகிறோம். நீங்கள் வடக்கு—கிழக்கில் உள்ள தமிழர்களை அழித்து விடுங்கள் என்ற அடிப்படையில் சிங்களப் பேரினவாதிகளும் இராணுவத்தினரும் கூட்டாக இயங்குகின்றனர் நாள் தவறாமல் தமிழர்கள் அழிக்கப்படுகிறார்கள். ஆனால் எம் மத்தியிலோ, காட்டிக் கொடுக்கும் இழிநிலை

கவிஞர் நாவண்ணனின் "எத்தனை எத்தனை வித்துக்கள் வீழ்ந்தன' நூல் வெளியீட்டு விழாவில் பேசிய யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருள் கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல் பேசும் போது இவ்வாறு கூறினார்.

நவாலிப் படுகொலைகளின் மூன்றாம் மாத நினைவாக 'எத்தனை எத்தனை வித்துக்கள் வீழ்ந்தன' நூல் வெளியீட்டுவிழா நவாலி சென்.பீற்றேர்ஸ் ஆலயமுன்றிலில் முதுபெரும் எழுத்தாளர் திரு. அப்பச்சி மகாலிங்கம் தலைமையில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது.

அவர் மேலும் கூறியதாவது:

புத்த குருமார் தீர்வுத்திட்டத்தை முற்றாக எதிர்க்கிறார்கள். அதில் உள்ள சாதகமான நிலைகளை உணராமல் கிறிஸ்தவ குருமார்கள், நாம் அதனை முழுமையாக [illegible] வேண்டும் என்று [illegible] றார்கள்.

தென்னிலங்கையில் உள்ள சிந்தனையாளர்கள், மதகுருமார்கள் உண்மை நிலையை ஏற்றுக் கொள்ளப் பின்நிற்கிறார்கள். மத விசுவாசம் உள்ளத்தில் இருக்குமாயின் உண்மையை எடுத்துக் கூறும் வகையில் தென்பகுதி மதத் தலைவர்கள் செயற்பட வேண்டும். ஆனால் அவர்களுக்கு உண்மையை எடுத்துக் கூறத் துணிவில்லை — என்றார்.

அவர் மேலும் பேசும் போது. விடுதலைப் பயணத்தில் விருந்தான மக்களின் சோக வரலாறுகள் இந்த நூலில் [illegible] நிலைய எடுத்துக் காட்ட இந்த நூல் உதவுகிறது.

நாங்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களானாலும் ஒரே பாதையில் சென்றால் விடுதலை நிச்சயம் என்பதை இதன் வாயிலாக உணரமுடியும் — என்று குறிப்பிட்டார்.

திரு. அப்பச்சி மகாலிங்கம் தனது தலைமையுரையில் பேசும் போது கூறியதாவது:

மலையில் இருந்து மலையைப் பார்த்தால் அதன் மதிப்பு தெரிவதில்லை. அதே போன்று சமகால இலக்கியத்தின் மதிப்பு அதே காலத்தில் தெரிவதில்லை. இந்த நூலைப் பொறுத்த வரை இது மாறுபட்டுள்ளது. உலகெங்கும் உள்ள மக்கள் எமது நிலையைப் புரிந்து கொள்ள இந்த மண்ணில் இடம் பெறும் அநீதிகளைத் தெரிந்து கொள்ள இந்த நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பட வேண்டியது உடனடித் தேவையாகும் — என்றார்.

புதுவை இரத்தினதுரை, திரு.சு.ரவி திருமதி கோகிலா மகேந்திரன், நூலாசிரியர் நாவண்ணன். அ மரியரொஸ்சா, ந அன்புராசா ஆகியோரும் பேசினார்கள்.

அன்பளிப்பு மற்றும் சிறப்புப் பிரதிகளை தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் திரு சு. ப. தமிழ்ச்செல்வன் குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் ஏனையோருக்கும் வழங்கினார். (ஒ-111)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

துணைவேந்தர் தெரிவு விவகாரம்

# கிழக்கு பல்கலை. மாணவர் திங்கள் முதல் பகிஷ்கரிப்பு!

கொழும்பு, ஒக். 14
கிழக்கு பல்கலைக்கழக கவுன்சிலைக்கலைக்கும் படியும் — பல்கலைக்கழகக் கவுன்சிலினால் வழங்கப்பட்ட, துணைவேந்தர் நியமனம் தொடர்பான சிபார்சை இரத்துச் செய்யுமாறு கோரியும் கடந்த திங்கட்கிழமை முதல் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

திங்கட்கிழமை தமது பகிஷ்கரிப்பை ஆரம்பித்த மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவாயில் கதவுகளைப் பூட்டி வைத்தனர்.

இதனால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களும் தமது கடமைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை பகிஷ்கரிப்பு தொடரும் என பல்கலைக்கழக மாணவர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்காக அண்மையில் கூடிய பல்கலைக்கழக கவுன்சில் மூவரின் பெயரை ஜனாதிபதிக்கு சிபார்சு செய்திருப்பது தெரிந்ததே. (எ)

## போக்குவரத்து தடைப்பட்டது

செம்பியன்பற்று, ஒக். 14
மாமுனை தெற்கில் இருந்து பளைக்குச் செல்லும் பாதையூடாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது.

அண்மையில் பெய்த மழையினால் இப் பாதையில் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை வெள்ளம் தேங்கி நிற்கிறது. (எ-36)

பாப்பரசரைத் தரிசிப்பதற்கு

# கொழும்பு வந்து திரும்பாதவர்களை கண்டுபிடிக்க பொலீஸார் தேடுதல்

## அடையாள அட்டைகள் தாண்டிக்குளத்தில் உள்ளனவாம்

கொழும்பு, ஒக். 14
பாப்பரசரைத் தரிசிக்க வடபகுதியிலிருந்து கொழும்பு வந்து மீண்டும் திரும்பாமல் கொழும்பில் மறைந்திருப்பதாகக் கருதப்படும் தமிழ் மக்களைக் கைது செய்வதற்கு கொழும்பிலும் சுற்றுப்புறத்திலும் எதிர்வரும் வாரங்களில் பாரிய தேடுதல் வேட்டைகளை மேற்கொள்ள பொலீஸார் தயாராயுள்ளனர்.

— இவ்வாறு பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ''லங்காதீப'' தெரிவிக்கிறது.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் 300 தமிழர்கள் மீண்டும் வடபகுதி திரும்பாமல் கொழும்பில் மறைந்திருப்பதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் விடுதலைப் புலிகளால் விசேட பயிற்சிபெற்ற உளவாளிகள் எனவும் பாதுகாப்புப் பிரிவினருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளனவாம்.

பாப்பரசரைத் தரிசிக்கும் நோக்கில் வடபகுதியிலிருந்து கொழும்பு வந்த சகல தமிழ் மக்களின் தேசிய அடையாள அட்டைகளும் தாண்டிக்குளத்திலுள்ள இராணுவ பொலீஸ் சோதனைச் சாவடியில் பெறப்பட்டன எனவும்; அவ்வாறு பெறப்பட்ட அடையாள அட்டைகள் அவர்கள் மீண்டும் வடபகுதி திரும்பிய போது அவர்களிடம் கையளிக்கப்பட்டன எனவும் ஆனால் கொழும்பிலிருந்து இதுவரை திரும்பாதோரின் தேசிய அடையாள அட்டைகள் இன்னும் தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பாதோர் தொடர்பாக இரகசியப் பொலீஸார் தனியான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அரசின் இரகசியங்கள் உட்பட தலைநகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகள் பற்றிய தகவல்களும் கொழும்பில் தங்கியிருக்கும் இவர்கள் மூலமே விடுதலைப் புலிகளுக்கு சென்றடைந்துள்ளன எனத் தெரிய வந்துள்ளதாம். (ஓ-10)

## இடமாற்றம்

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தற்காலிகமாக சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. (ஓ-117)

## 10 பேர் தெரிவு

தென்மராட்சி, ஒக். 14
கடந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெற்ற பொது எழுதுநர் தரம் II 'அ' வுக்கான பொதுப் பரீட்சையில் யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் பத்துப் பேர் தெரிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-117)

# 20 லட்சம் பனை விதை நடுவதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 14
கடந்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாரிய பனை நடுகைத் திட்டமான கற்பகச் சோலைத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 20 லட்சம் பனை விதைகளை நட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் திட்டமிட்டுள்ளனர்.

இதன்படி எதிர்காலத்தில் பனந்தொழிலை இலகுவாக மேற்கொள்ள வசதியாகவும் பனம் நாற்றுக்களுக்கு இடையே ஊடுபயிர்ச் செய்கையை மேற்கொண்டு பயனடையும் நோக்கோடும் இப் பனை விதை நடுகையை பண்ணை முறையில் அமைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை —

தமிழீழத்தின் மூலவளம் எனக் கருதப்படும் பனை வளத்தினை பெருக்கி தேசத்தில் தன்நிறைவை ஏற்படுத்தும் நோக்கில் கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் இம்மாதம் 25 ஆம் திகதி வரையிலான ஒரு மாத காலப் பகுதியை பனை நடுகைக் காலமாக பனை, தென்னை வளப்பகுதியினர் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் கற்பகச் சோலைத் திட்டத்தின் கீழ் இரண்டாயிரம் ஆண்டளவில் இரண்டு கோடி பனை நடுகை என்ற இலக்கை நிர்ணயித்து பயிரிய அளவிலான பனை நடுகையை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டும் இதே காலப் பகுதியில் (செப்-ஒக்) மிகப் பெரியளவிலான பனை நடுகைத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் இந்தக் காலப்பகுதியில் பனை தறிப்பதற்கான அனுமதி தற்காலிகமாக நிறுத்தப்படவுள்ளதாகவும் கடந்த 15 ஆம் திகதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியில் நடைபெற்ற கற்பகச்சோலைநெறிப்படுத்தற் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது (ஓ)


உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் (வ/து)
உடுப்பிட்டி.

**தேவை**

எமது சங்கத்திற்கு நல்ல நிலையில் உள்ள 10 அந்தர், 20 அந்தர் கொள்ளளவுள்ள மேடைத் தராசுகள் தேவைப்படுகின்றன.

விற்க விரும்புவோர் தம்மிடமுள்ள தராசின் கொள்ளளவு, இனம், விலை என்னும் விவரங்களுடன் பொது முகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், உடுப்பிட்டி என்னும் முகவரிக்கோ அன்றி புதிய இல. 201, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கோ தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்.
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
உடுப்பிட்டி.

(38988)



அரசினர் பொது (போதனா) வைத்தியசாலை
யாழ்ப்பாணம்

**கேள்விப்பத்திரம்**

**சலவை ஒப்பந்தம் - 1996**

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையின் அழுக்குத் துணிகளை 01-01 1996 தொடக்கம் 31-12-1996 வரை சலவை செய்வதற்கான ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்கான கேள்விப் பத்திரங்கள் 03-11-1995 காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

உரிய பத்திரங்களில் இரு பிரதிகளாகக் கேள்விகள் நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு பணமான ரூபா 150/- ஐ வைத்தியசாலைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம.

கேள்விப்பத்திரங்கள் இக் காரியாலயத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் நேரடியாகச் சேர்க்கப்படலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படலாம்.

கேள்விப் பத்திரங்களை அவைகள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதிக்கு முதல்நாள் நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம் கேள்விகள் எல்லாம் வழங்கப்படும் பத்திரங்களில் இல்லாவிடில் நிராகரிக்கப்படும். முடிவுத் திகதியன்று காலை 10-00 மணிக்குப் பின்னர் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர் பிணைப் பணமாக ரூபா 1500/- செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் 03-11-95 காலை 10-00 மணிக்கு எனது காரியாலயத்தில் திறக்கப்படும் போது கேள்விதாரர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

மேலதிக விவரங்களை இவ் வைத்தியசாலையில் கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வைத்தியகலாநிதி
செல்வி நவமலர் கனகரத்தினம்,
பணிப்பாளர்,
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

12-10-1995 (சி-2460)


## தென்னை செய்கைக்கு ஊக்குவிப்பு

மணற்பாங்கான பிரதேசங்களில் தென்னைகளை நடுகை செய்து சீரழிந்து கொண்டிருக்கும் மண்ணையும் சுற்றுப்புறச் சூழலையும் பாதுகாக்கும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தென்னைச் செய்கையை ஊக்குவித்து வருகின்றனர்.

நோய் பீடைக் கட்டுப்பாடு பசளைப் பிரயோகம், ஊடு பயிர்ச்செய்கை, நாற்றுநடல். நல்லின தென்னங்கன்று விநியோகம், சிக்கன நீர்ப்பாசனம் போன்ற விவசாய தொழில் நுட்ப சேவைகளும்—

பொருத்தமான நிலத்தெரிவு தென்னைகளை தரமுயர்த்தி உச்ச பயன்பாடு பெறல் போன்ற வளம்சார் ஆலோசனைகளும் — வழங்கப்படவுள்ளதாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இச்சேவைகள், ஆலோசனைகள் சம்பந்தமாக தெளிவான விவரங்களைப் பெற விரும்பும் தென்னைச் செய்கையாளரை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளும் படியும் காலக்கிரமத்தில் இச் சேவைகள் தமிழீழ பிரதேசம் முழுவதுமாக விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (இ)


**கண்ணீர் அஞ்சலி**

**செல்லப்பா சிவலோகநாதன்**
(நில அளவையாளர்)

எமது சங்கத்தின் தொடக்க உறுப்பினரும், கணக்காய்வாளரும்
எப்பொழுதும் இன்முகத்துடன் எமக்கு ஓர் முன்மாதிரியுமாய் விளங்கிய

**அமரர் செ. சிவலோகநாதன்**
அவர்களுக்கு
எமது உள்ளாழத்திலிருந்தெழும் அஞ்சலிகள்.
அவர் ஆன்மா சாந்திபெற எம் பிரார்த்தனைகள்.

உத்தரவு பெற்ற நில அளவையாளர்
சங்கம், வட பகுதி.

(38997)



**அந்தியேட்டி அழைப்பு**

திருமதி
**கோணேஸ்வரி தம்பிப்பிள்ளை**
(அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள்
வே. பாலசுப்பிரமணியம் அவர்களின் வரணி இயற்றாலை, வரணி இல்லத்தில் நாளை (15-10-95) ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றன. உறவினர்கள், நண்பர்கள் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

- குடும்பத்தினர்.

விலாசம்;
வே. பாலசுப்பிரமணியம்,
வரணி இயற்றாலை,
வரணி.

[38994]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

229/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சமாதானத்தை அடைய...

✶ அரசாங்கம் இப்போது மேற்கொள்ளும் இராணுவத் தாக்குதல்களை நிறுத்த வேண்டும்.

✶ அதன் மூலம் வழமை நிலைக்கான சூழலை ஏற்படுத்த வேண்டும்.

✶ தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும்.

குடாநாட்டைச் சேர்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், புலமையாளர்கள் கையெழுத்திட்டு, ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிய மகஜரில் இந்த மூன்று விடயங்களும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

— இங்கு வாழுகின்ற தமிழர் ஒவ்வொருவரையும் ஷெல்லாலும், குண்டாலும் பயமுறுத்துகின்ற தற்போதைய இராணுவ நடவடிக்கைகளின் அழிவு ஏற்படுத்தும் தன்மை.

— வடக்கு - கிழக்குத் தமிழர்களுடனும், அவர்களின் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப் புலிகளுடனும் கலந்து ஆராயாது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சாத்தியமின்மை.

— தமிழருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே வேறுபாடு கற்பிப்பது என்பதோ, தமிழரைப் புலிகளிடம் இருந்து அந்நியப்படுத்துவது என்பதோ யதார்த்த பூர்வமான ஒன்றல்ல —

இந்த மூன்று அம்சங்களும் மகஜரில் முனைப்புறுத்திச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அரசாங்கம் — அரசாங்கப் படைகள் — வடக்கில் நடத்தும் இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் படுகொலை செய்யப்படுவது மட்டுமன்றி அவர்களின் வாழ்வே சின்னாபின்னமாக்கிச் சிதைக்கப்படுகிறது.

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும் என்ற மனமார்ந்த விருப்பம் அரசாங்கத்துக்கு இருந்தால் —

முதலில் மக்களின் வாழ்வில் வழமைநிலையைக் கொண்டுவரவேண்டும்.

அதாவது போர்ப் பீதியிலிருந்தும் — ஷெல், குண்டு வீச்சு அபாயத்திலிருந்தும் —

அவர்கள் தமது வீடு வாசல்களை விட்டு இடம்பெயர்ந்து அவலப்படும் நிலையிலிருந்தும் —

இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப வசதி செய்ய வேண்டும்.

அத்தகைய ஒரு நிலையை உருவாக்காமல், தாக்குதல்களை நடத்திக்கொண்டு, பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்பதால் எதுவுமே நடைமுறைச் சாத்தியமாகப் போவதில்லை.

அதுபோலவே, தமிழரை விடுதலைப் புலிகளிடம் இருந்து அந்நியப்படுத்தி பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்று கருதுவதும் நடைமுறைச் சாத்தியமற்றதாகும்.

சமாதானத்தை சமாதான வழிகளால் அடைய முடியாவிடில் வேறு எந்த வழியிலாவது அதனை அடைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறுவதும் அபத்தமானது.

யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, தமிழ் மக்களின் உயிர்கள் மீதும் வாழ்வின் மீதும் அக்கறை காட்டி திட்டமிட்ட ரீதியில் நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளைக் கையாண்டால் சமாதானத்தை அடைவது ஒன்றும் கஷ்டமல்ல.

# பொருள்களை எடுத்து வரும்வரை காத்திருந்து பொதுமக்களை சுற்றிவளைக்கும் படையினர்!

## தப்பி வந்தோர் தகவல்

தென்மராட்சி ஒக். 14

வலிகாமம் கிழக்குப் பகுதிகளில் உள்ள தமது வீடுகளில் பொருள்களை எடுக்கச் செல்வோர், தமது பொருள்களை எடுத்துவரும் வரை படையினர் மறைந்திருந்து காத்திருக்கின்றனர். பின்னர் அவர்கள் பொருள்களுடன் கூட்டமாக திரும்பிவரும் போது சுற்றிவளைத்துப் பிடிக்கின்றனர்.

புத்தூரில் படையினரிடம் அகப்பட்டு தப்பி வந்த மட்டுவில் கிழக்கில் வசிக்கும் ஏரம்பு (வயது 71) என்ற வயோதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை புத்தூர் கிழக்கிலுள்ள வீட்டில் பொருள்களை எடுத்து வந்த ஒருவரின் தகவலை அடுத்து தாமும் மற்றும் சிலரும் பொருள்களை எடுத்துவரச் சென்றதாகவும்—

வீடுகளில் பொருள்களை எடுத்துக்கொண்டு நின்ற வேளையில் திடீரென படையினர் அங்கு வந்ததாகவும்—

தன்னுடன் வந்த எட்டுப் பேர் படையினரிடம் சிக்கியதாகவும்—

தாம் வயோதிபர் என்று கூறியதால் பொருள்கள் எதனையும் எடுக்காமல் செல்லுமாறு படையினர் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

அவருடன் சென்று படையினரின் சுற்றிவளைப்பில் தப்பி வந்த இளைஞர் ஒருவர் தெரிவிக்கையில் கூறியதாவது:-

சம்பவதினம் புத்தூர் கிழக்கில் உள்ள எமது வீடுகளில் பொருள்களை எடுத்துவர பதினைந்துபேர் சென்றோம்.

ஒரே இடத்தில் சைக்கிள்களை விட்டு விட்டு பொருள்களை எடுக்கச் சென்றோம்.

சைக்கிள்களை விட்ட இடத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் எனது வீடு இருந்தது —

முதலில் உணவுப் பொருள்களை பை ஒன்றில் கட்டி சைக்கிளில் வைத்து விட்டு மேலும் பொருள்களை எடுத்துவரச் சென்றேன்.

எனது வீட்டுக்கு எதிர்ப் பக்கத்தில் ஷெல் வீச்சினால் சேதமுற்று காணப்பட்ட வீடொன்றில் மறைந்திருந்த படையினர் என்னை "கொட்டியா நில்லு" என்று கூப்பிட்டனர்.

ஆமிக்காரர் என்னை நோக்கி வருவதைக் கண்டதும் எனது வீட்டின் பின் காணியால் ஓடத் தொடங்கினேன்.

பல வேலிகள் பாய்ந்து வெகுதூரம் வந்தபோது என்னுடன் வந்த சிலரும் ஓடி வருவதைக் கண்டேன். பின்னர் ஒரு மணி நேரம் வெளியான ஒரு பகுதியில் படுத்திருந்த நாங்கள் மெல்ல மெல்ல சைக்கிள் இருந்த இடத்துக்கு மீண்டும் சென்றோம். எடுத்த பொருள்களை அந்த இடத்திலேயே விட்டு விட்டு மட்டுவில் தெற்குக்கு வந்தோம். இப்படி அவர் கூறினார்.

தம்மை படையினர் அழைத்ததும் திரும்பிப் பார்த்த போது அச்சுவேலியைச் சேர்ந்த ஈ.பி.டி.பி. உறுப்பினரான விஜயன் என்பவரை தாம் கண்டதாகவும் —

குறித்த விஜயன் முன்னர் அச்சுவேலிப் பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். பொறுப்பாளராக இருந்தபோது தம்மைத் தாக்கியதால் அவரைத் தம்மால் அடையாளம் காண முடிந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

### சிரட்டையில் கள்

இதேவேளை தாங்கள் வாழைத்தோட்டம் ஒன்றின் ஊடாகச் சென்றபோது முட்டிகளிலும் சிரட்டைகளிலும் கள் இருந்ததைக் கண்டதாகவும் —

புத்தூர் கிழக்குப் பகுதியில் உள்ள பலரது மாடுகள் அப்பகுதியில் உள்ள தோட்டங்களில் பயிர்களை அழித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறுப்பிட்டிக்குச் சென்று வந்த ஒருவர் தெரிவிக்கையில்:-

சிறுப்பிட்டிப் பகுதியில் சுமார் எண்ணூறுக்கும் மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்திருக்கலாமெனவும் அங்குள்ள ஒவ்வொரு காணியிலும் குறைந்தது நான்கு ஷெல்கள் வீழ்ந்த அடையாளம் காணப்படுவதாகவும் கூறினார்.

பல வீடுகள் ஷெல் வீச்சினால் சேதமடைந்திருப்பதாகவும் வாழைத்தோட்டங்கள் அழிந்திருப்பதாகவும் ஆடுகளும், மாடுகளும் இறந்து அழுகிய நிலையில் துர்நாற்றம் வீசுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் சிறுப்பிட்டி மதவடியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்னால் வீதியில் வீழ்ந்த ஷெல்லினால் வீதியும் கடையும் சேதமடைந்திருப்பதாகவும், பலர் வாழைக்குலைகளை வெட்டி சைக்கிளில் ஏற்றிச் செல்வதை கண்டதாகவும் அவர் கூறினார்.

[இ-113]

## வீடு பார்க்கச் சென்ற பலர் திரும்பி வரவில்லை

தென்மராட்சி, ஒக். 14

புத்தூர் கிழக்கிலுள்ள வீட்டில் பொருள்களை எடுத்து வரச் சென்றவர் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டார். அவர் கொண்டு சென்ற சைக்கிளும் வேறு பொருள்களும் அவருடன் சென்றவர்களால் மீட்கப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கலைமதி கிளை முகாமையாளரான ச. துரைசிங்கம் என்பவரே படையினரிடம் அகப்பட்டவராவார்.

மற்றும் ஒரு சம்பவத்தில் தகப்பனும் மகனும் படையினரிடம் சிக்கி உள்ளனர்.

மட்டுவில் தெற்கில் தங்கியிருந்த ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த நாகன் மகேசன் (வயது 51) அவரது மகன் மகேசன் பிரார்த்தன் (வயது 21) ஆகியோரே படையினரிடம் பிடிபட்டவர்கள் ஆவர்.

தந்தையாரான நாகன் மகேசன் கடந்த செவ்வாய்க்கிழமை வீடு பார்க்கச் சென்றார். அவர் திரும்பி வராததால் அவரது மகனான மகேசன் பிரார்த்தன் அடுத்தநாள் புதன்கிழமை அவரைத் தேடிச் சென்றார். ஆனால் அவரும் திரும்பி வரவில்லை.

கடந்த புதன்கிழமை ஆவரங்கால் கிழக்குப் பகுதியில் உள்ள வீட்டுக்குச் சென்ற அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பணியாளரான கந்தசாமி சிவராசா (வயது 21) என்பவரும் நேற்று வரை வீடு திரும்பவில்லை என மட்டுவில் வடக்கில் உள்ள அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

(இ-117)

### சண்டிலிப்பாய் வட்டத்தில்

## தேசிய பாதுகாப்பு நிதி கலந்துரையாடல்கள்

சண்டிலிப்பாய் வட்டத்தைச் சேர்ந்த பின்வரும் கிராமசேவகர் பிரிவுகளில் தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒப்புதல் அளிக்காதவர்களுக்கும் —

இப் பகுதிகளில் இடம்பெயர்ந்து வந்து வசிக்கும் சண்டிலிப்பாய் வட்டத்தின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்குமான தேசிய பாதுகாப்பு நிதி கலந்துரையாடல்கள் இன்றும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

ஆனைக்கோட்டை, [illegible]புலம், சாவற்கட்டு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளுக்கான கலந்துரையாடல் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரையும் —

மானிப்பாய் மேற்கு, பிரான்பற்று, சண்டிலிப்பாய் மத்தி, மானிப்பாய் தெற்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளுக்கான கலந்துரையாடல் கட்டுடையில் உள்ள மானிப்பாய் மேற்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரையும் நடைபெறும்.

[ஐ]

### யாழ்ப்பாணத்தை--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் நாம் மேற்கொண்ட 'இடிமுழக்கம்' இராணுவ நடவடிக்கை எமது துருப்புகளின் நிலையைப் பலப்படுத்தி உள்ளது —

அதனை அடித்தளமாக வைத்துக் கொண்டு, யாழ்ப்பாணக் குடாநாட்டை நாம் விரைவில் கைப்பற்றி விடுவோம். அதனை எந்தச் சக்தியாலும் நிறுத்திவிட முடியாது —

விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே எமது நோக்கம். ஆனால் பேரம் பேசக் கூடிய பலமான நிலையில் நாம் நிற்கவேண்டும். அதற்காகவே போர் நடத்தப்படுகிறது — என்றும் இராணுவத் தளபதி கூறினார். (அ)

### கொழும்பில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்டிருப்பதாவது :-

கொழும்பின் பாதுகாப்பு நிலைவரம் மிகவும் திருப்திகரமாக இருப்பதாக அரசு ஒரு சில தினங்களுக்கு முன்னர் தான் நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தது.

பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற சங்கத்தின் மாநாட்டில் பங்குபற்ற பொதுநலவாய நாடுகளின் உறுப்பினர்கள் கொழும்பில் கூடியிருந்த வேளை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி ஒன்றின் தலைவரின் வீடு தாக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொலிஸாரின் ரோந்து வாகனம் ஒன்றும் தாக்குதல் நடத்தியவர்களால் துரத்தப்பட்டிருக்கிறது.

கிழக்கில் இடம்பெற்ற சம்பவங்களையும், கொழும்பில் நடந்த தாக்குதலையும் கருத்திற்கொண்டு பார்க்கையில் கிழக்கின் பாதுகாப்பு நிலைவரத்துக்கும், கொழும்பின் பாதுகாப்பு நிலைவரத்துக்கும் இடையே பெரிய வித்தியாசத்தை எம்மால் காணமுடியவில்லை — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ-3]

## கிழக்கு பல்கலைக் கழகம் மூடப்பட்டது

கொழும்பு, ஒக். 14

கிழக்கு பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் பழைய கட்டடத் தொகுதிக்கு நேற்றுப் பிற்பகலில் இருந்து மறு அறிவித்தல் வரை மாணவர்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பழைய கட்டடத் தொகுதியில் நிர்வாகப்பிரிவும் கல்வி சார் அலுவலகங்களும் உள்ளன.

(இ-3)

## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.14

உடுவில் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இணுவில் வைத்தியசாலை சுகாதாரப் பிரிவில் இன்று காலை 9 மணி முதல் நடைபெறும் என்று உடுவில் பிரதேச இணைப்பாளர் செல்வி ப. சுசிலா தெரிவித்துள்ளார்.

(ஐ-3)

### கல்யாணி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமயம் —

படையினருக்கான பொருள்களையும் அதில் ஏற்றிச் செல்ல வேண்டும் என கப்பல் கப்டனுக்கு திடீரெனத் தெரிவிக்கப்பட்டதும் —

படையினருக்கான பொருள்களை ஏற்றிச் செல்ல அக்கப்பல் நிறுவனம் மறுத்ததை அடுத்து, கப்பலில் பொருள்களை ஏற்றுவது இடைநிறுத்தப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

தற்சமயம் மீண்டும் இக்கப்பலில் பொருள்களை ஏற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் அது காங்கேசன்துறைக்கோ, அல்லது பருத்தித்துறைக்கோ வந்து சேரும் என்பது குறித்த தகவல் எதுவும் யாழ்ப்பாணத்துக்கு கிடைக்கவில்லை.

இதேவேளை —

மண்ணெண்ணெய், மற்றும் உரம் ஆகியவற்றுடன் "மாஹோர" கப்பல் அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

[ஐ-3]

### தெற்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம்பஹா, பதுளை, கண்டி கேகாலை அம்பாறை மாவட்டங்களிலும் கையொப்ப இயக்கம் நடத்தப்பட்டது.

தீர்வு யோசனைகள் நடைமுறைப் படுத்தப்பட்டால் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை மக்களுக்கு விளக்குவதே தமது இயக்கத்தின் நோக்கம் என்று தேசிய மீட்பு முன்னணிப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஐந்து லட்சம் கையொப்பம் சேகரிக்கப்பட்ட பின்னர் தீர்வு யோசனையை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்றுகோரி அவை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படுமாம்.

[அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா சிவலோகநாதன்

அரியாலையைச் சேர்ந்த செல்லப்பா சிவலோகநாதன் (ஓய்வு பெற்ற நில அளவை உப அத்தியட்சகர்) அவர்களின் இறுதிக் கிரியை 14-10-95 (இன்று) காலை 9-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
— குடும்பத்தினர்

477, கண்டி வீதி,
அரியாலை (38998)

## செல்லத்தம்பி செல்வராசா

(இளைப்பாறிய விகிதர், காட்டு இலாகா)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி செல்வராசா காலமானார்.

அன்னார் திருமதி தையல்நாயகியின் அருமைக் கணவரும் காலஞ்சென்ற செல்லத்தம்பி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நி. வ. ஐயாத்துரை தம்பதிகளின் மருமகனும் செல்வகுமாரி, நவரட்ணராசா, சிவராசா, ராசகுமாரி, மகாராசா, லவிதகுமாரி, ஜெயக்குமாரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கமலநாதன் [மலேரியா தடுப்பு இயக்கம், கிளிநொச்சி] சற்குணமலர், கஸ்தூரி, சிவகுருநாதன் [கூட்டுறவு சங்க பரிசோதகர்] மஞ்சுளா, மணிமேந்திரன், நவரட்ணராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் பிறேம்நாத், பிரதீப், சஞ்சயன், பிரியதர்ஷன், சிவரஞ்ஜினி, சிவரமணன், சிவகஜன், பிரசாந்தி, சோபிதன், சந்திரா ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [14-10-95] சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
செ. தையல்நாயகி
(மனைவி)

இல: 280, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [38990]

## சரவணமுத்து சுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஆசிரியர் - நடேஸ்வரா கல்லூரி, காங்கேசன்துறை)

மாவிட்டபுரம் புகையிரத நிலையத்தடியை பிறப்பிடமாகவும் தற்போது சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட ச. சுப்பிரமணியம் அவர்கள் 13-10-95 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குரும்பசிட்டி தற்பரசக்தி, மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புக் கணவரும், தவலட்சுமி (ஆசிரியை கொழும்பு), அருந்தவம் (ஆசிரியை நடேஸ்வரா கல்லூரி), சிவகுமாரன் [அவுஸ்திரேலியா), உதயகுமாரன் [அவுஸ்திரேலியா], திருமகள் (பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் - தாவடி), கலைமகள் (மாணவி பல்கலைக்கழக கல்லூரி - வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற விசுவலிங்கம் (ஆசிரியர்), நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் கா. சிவகுருநாதன், சிவகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், கார்த்திகா, அருட்பாலவ ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 14-10-95 பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சங்கானை கரைச்சி மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
அருந்தவம்
(மகள்)

'ஆனந்த வாசா',
வல்லை வீதி,
சங்கானை. [39001]

## திருமதி உமாதேவி பரராசசிங்கம்

கல்வியங்காட்டைச் சேர்ந்தவரும் திருமலையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி உமாதேவி பரராசசிங்கம் 12-10-1995 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இலகுப்பிள்ளை சீவரத்தினம் (உடுவில் விஜயம்), மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகளும், திரு திருமதி கணேசபிள்ளை (திருமலை) ஆகியோரின் மருமகளும், பரராசசிங்கத்தின் (இளைப்பாறிய கடற்படை உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், மீராதேவி, கோகுலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி ஈஸ்வரிதேவி, அரியரத்தினம், சிவசூரியர் (கொழும்பு), கோபாலரத்தினம் (நோர்வே), மகேசரத்தினம் (கனடா), காலஞ்சென்ற அருட்சோதி, திருமதி புஸ்பதேவி சரவணதாசன், அருணகிரிநாதன் (யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அருமைச்சகோதரியும், அரியரத்தினம் ஞானாம்பிகை, பொன்னரசி, சரவணதாசன், புனிதவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் திருமலையில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
சி. மகேஸ்வரி

ஞா. வா. ச. வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (39002)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ். மாவட்ட பாடசாலைகளின் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் மாவட்ட நிலையான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை நடக்கும் 17 வயதுப் பிரிவுப் போட்டிகளில்—

உரும்பராய் இந்துவை எதிர்த்து சண்டிலிப்பாய், இந்துவும், மானிப்பாய் இந்துவை எதிர்த்து இணுவில் இந்துவும்- மோதவிருக்கின்றன.

மாலை நடக்கும் 15 வயதுப் பிரிவுப் போட்டிகளில்—

நாவற்குழி ம. வியை எதிர்த்து யாழ். இந்துவும், நாவாந்துறை றோ. கவை எதிர்த்து யூனியன் கல்லூரியும் மோதவிருக்கின்றன.

★ ★ ★

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் பட்மின்ரன் போட்டி இன்று காலை 9 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சாவகச்சேரி, தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய் கோட்ட மாணவர்கள் இப்போட்டியில் பங்கு பற்றுவர். (இ-3)

★ ★ ★

வலி. கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று மாலை பல்கலைக்கழக மருத்துவபீடமைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:—

★ பிற்பகல் 3.30 —சென். நீக்கலஸ் எதிர் கலைவாணி.

★ பிற்பகல் 4.30 —பாடும்மீன் எதிர் சென். மேரிஸ். [ஐ]

★ ★ ★

தென்மராட்சி, தீவக உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் காட்சி உதைபந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி நகர சபை பொது மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:—

★ மிருசுவில் புனித நீக்கலஸ் எதிர் நாவற்குழி இலக்கியன்

★ மயிலங்காடு ஞானமுருகன் எதிர் இளவாலை யங்ஹென்றீஸ். [ஐ]

## இராணுவத்தின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆயுதப் போர் நடவடிக்கைகள் குறித்தும்—

புலிகளுடன் அவர் அமைதிப் பேச்சு நடத்திய விதம் குறித்தும்—

சிறுபான்மை தமிழருக்கான அதிகாரப்பகிர்வு திட்டம் குறித்தும் ரணில் ஜனாதிபதியிடம் கேள்வி கேட்டுள்ளார் என "ரொய்ட்டர்" செய்தியாளர் குறிப்பிடுள்ளார்.

அதிகாரப் பகிர்வுத் திட்டத்தின் மூலம் சிறுபான்மை மக்களை கவரவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் சந்திரிகா அரசு தற்போது யாழ்ப்பாணத்தில் மக்கள் எதிர்கொண்டுள்ள கடுமையான உணவு மற்றும் மருந்துப்பொருள் தட்டுப்பாட்டினால் ஏமாற்றத்தையே சந்திக்க நேரிடும் எனவும் ரணில் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மக்களுக்கு தேவையான உணவுப்பொருள்களை அரசு உடனடியாக வழங்கவேண்டும். இராணுவம் என்றாவது ஒருநாள் புலிகளுக்கு எதிரான பாரிய தாக்குதலுக்கு திட்டமிட்டு வருவது குறித்து கவலை அடைந்துள்ளதாகவும் ரணில் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## தம்பு கதிர்காமராஜா

[பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் - தாவர வியற்றுறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்]

தம்பு கதிர்காமராஜா நேற்றுக் காலமானார்.

இவர் வட்டுக்கோட்டை காலஞ்சென்ற தம்பு தம்பதிகளின் அன்பு மகனும், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பையா தம்பதிகளின் அன்பு மருமகனும், மங்கையர்க்கரசி (ராசாத்தி), அவர்களின் அன்புக்கணவரும், ராஜ்குமார் (பிரான்ஸ்), ராஜினி (வர்த்தக வங்கி - யாழ்ப்பாணம்), ரமேஸ்குமார் (கொக்குவில் இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வரட்ணம் (இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்), சிவபாக்கியம் நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை [15-10-95] ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில், கொக்குவில் இந்துமயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ராஜினி
[மகள்]

18, பிறவுண் வீதி,
கொக்குவில். (39005)

## திருமதி நாகரத்தினம் துரைராஜா

நீராவியடியைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் துரைராஜா நேற்றுக் காலமானார் அன்னார் காலஞ்சென்ற செல்லையா துரைராஜாவின் அன்பு மனைவியும், பத்மாவதி, Dr. விக்னராஜா (முந்தல்), கமலாதேவி, வசந்தி (லண்டன்), ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. செல்வராஜா, மகேஸ்வரி, பூபாலசிங்கம், டேவிற் (லண்டன்), காலஞ்சென்ற சிவநாதன் ஆகியோரின் மாமியாரும், Dr. நிரஞ்சனா, Dr. நிரஞ்சன், துஷ்யந்தன், அனுஷா, யாமினி, மைதிலி, அபிராமி, குறூடி (லண்டன்), சிவானுஜா, சிந்துஜன், நிருஜன் Dr. ஜெயமோகன், Dr. ரோகினி, சுசித்திரா, கணேஷன், சத்தியசீலன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், ஷியாமியின் ஆசைப்பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் 249/2, நாயன்மார் வீதி, நல்லூரில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கமலாதேவி
(மகள்)

(39004)

## திருமதி சரோஜினிதேவி உரோமகேசுவரன்

சுதுமலையைச் சேர்ந்த திருமதி சரோஜினிதேவி உரோமகேசுவரன் நேற்று மாலை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் வைத்திய கலாநிதி பூரணபசுபதிப்பிள்ளை உரோமகேசுவரன் [ஆயுர்வேத மாகாணப் பணிப்பாளர், சுகாதார மகளிர் விவகார அமைச்சு வடக்கு - கிழக்கு மாகாணம் திருகோணமலை] அவர்களின் அன்பு மனைவியும், புவனலோஜினி [மாணவி வடமாகாண சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்], சிறீக்குமார் [ஐ. பி. எஸ். கொழும்பு], ஹேமமாலினி [மாணவி, இந்து மகளிர் கல்லூரி மானிப்பாய்] ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை [15-10-95] ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் சுதுமலை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வைத்திய கலாநிதி பூ. உரோமகேசுவரன்
(கணவர்)

மதவடி,
சுதுமலை மத்தி. (39007)


பெற்றோர்களே!

உங்கள் குழந்தைகளுக்கு
நீங்கள் ஆற்றவேண்டிய
உடனடிப் பணி....
ஊனமாக்கும்
போலியோவை
தடுக்க உதவுவதே
நவம்பர் 4
அதற்கான
நன்னாள்!


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 298/2இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14-10-95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org